www.Padasalai.Net www.TrbTnpsc.com

# K முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2019

## பத்தாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

2. வேறுபட்ட குழுவினைக் கண்டறிக:

அ) தாள், தண்டு, கோல், தூறு ஆ) கவை, கொம்பு, கிளை, சினை

இ) சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை ஈ) கழி, குச்சு, இணுக்கு, கழை

3. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க:

| | | | |
|---|---|---|---|
| 1. | கொண்டல் | - 1. | மேற்கு |
| 2. | கோடை | - 2. | தெற்கு |
| 3. | வாடை | - 3. | கிழக்கு |
| 4. | தென்றல் | - 4. | வடக்கு |

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 4, 1, 3 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

4. புயலிலே ஒரு தோணி என்பது ............

அ) சிறுகதை ஆ) புதினம் இ) காப்பியம் ஈ) கவிதை

5. மினசோட்டா தமிழ்ச்சங்கம் அமைந்துள்ள இடம் எது?

அ) அமெரிக்கா ஆ) இலங்கை இ) மொரிசியஸ் ஈ) மலேசியா

**II. சுருக்கமாக விடையளிக்க:** 5×1=5

6. தமிழ் - இத்தனிமொழியுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழி ஆக்குக.

7. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை - அது என்ன?

8. *தொகைச் சொல்லை விரித்தெழுதுக :* முத்தமிழ்

9. தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே - *இவ்வடியில் இடம்பெற்றுள்ள தொடை நயத்தை எடுத்தெழுதுக.*

10. *பழமொழியை கொண்டு நிறைவு செய்க :* உப்பிட்டவரை ......................

**III. எவையேனும் இரண்டனுக்கு விடையளி:** 2×2=4

11. பூவின் பலவேறு நிலைகளைக் கூறு.

12. வசன கவிதை - குறிப்பு வரைக.

13. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

**IV. எவையேனும் இரண்டனுக்கு விடையளி:**

14. உயிரளபெடையின் வகைகள் யாவை?

15. சொற்றொடர் என்றால் என்ன?

16. வினைமுற்றுத் தொடர் என்றால் என்ன?

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



V. எவையேனும் இரண்டனுக்கு விடையளி: 2×3=6

17. முல்லை நிலத்திலிருந்தும், மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை?

18. சோலைக் (பூங்கா) காற்றும், மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

19. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களைப் பாவலரேறு சுட்டுவன யாவை?

VI. எவையேனும் இரண்டனுக்கு விடையளி: 2×3=6

20. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது - ஆகிய வினைமுற்று சொற்களை தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

21. தொகைநிலைத் தொடர்கள் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

22. தொகாநிலைத்தொடர்கள் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

VII. எவையேனும் ஒன்றனுக்கு விடையளி: 1×6=6

23. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

24. காற்று மாசுபடுவதற்கான காரணங்கள், அதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் அவற்றை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எழுதுக.

VIII. எவையேனும் ஒன்றனுக்கு விடையளி: 1×6=6

25. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

26. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

IX. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக : 1×4=4

27.



X. அடிபிறழாமல் எழுதுக: 2+2=4

28. "அன்னை மொழியே எனத்தொடங்கி பேரரசே! என்று முடியும் அன்னை மொழியே பாடலை எழுதுக.

29. முயற்சி எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

-----------

Padasalai

Scanned by CamScanner